# பங்களாதேஷ் பிரதமர் இந்திய ஜனாதிபதியை சந்தித்தார்
ஜூன் 22, 2024

பங்களாதேஷ் மக்கள் குடியரசின் பிரதம மந்திரி ஷேக் ஹசீனா அவர்கள் ஜனாதிபதி ஸ்ரீமதி. திரௌபதி முர்மு அவர்களை 2024 ஜூன் 22 அன்று ராஷ்டிரபதி பவனில் சந்தித்தார்.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா அவர்களை வரவேற்ற இந்திய ஜனாதிபதி அவர்கள் புதிய அரசாங்கம் பதவியேற்ற சில நாட்களிலேயே அவரை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். இந்த வழக்கமான கலந்துரையாடல்கள், 1971 ஆம் ஆண்டு பங்களாதேஷின் விடுதலைப் போரின் போது தொடங்கிய நட்புறவு மற்றும் ஒத்துழைப்பின் நீடித்த உணர்வை பிரதிபலிப்பதாக அவர் கூறினார்.

பிரதமர் ஷேக் ஹசீனா அவர்களின் தலைமையில் பங்களாதேஷ் குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக இந்திய ஜனாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியாவும், பங்களாதேஷும் வேகமாக முன்னேறி வருவதாகவும், புதிய துறைகளில் நுழைந்து வருவதாகவும் இந்திய ஜனாதிபதி குறிப்பிட்டார். இது இந்தியா-பங்களாதேஷ் உறவின் எதிர்கால போக்கை வரையறுக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

பொருளாதார உறவுகள், மேம்பாட்டுக் கூட்டாண்மை, பாதுகாப்பு ஒத்துழைப்பு, எரிசக்தி பாதுகாப்பு மற்றும் இணைப்பு உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் உறவுகளை மேம்படுத்த இரு தலைவர்களும் இணைந்து பணியாற்ற ஒப்புக்கொண்டனர்.

09 ஜூன் 2024 அன்று புதிய அரசாங்கம் அமைந்த பிறகு இந்தியாவின் முதல் அரசுமுறைப் பயணம் இதுவாகும்.

**புது தில்லி**
**ஜூன் 22, 2024**